Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 21-04-2026
Deposition of witness for : PW 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தன் | வயது | : | 20 |
| தந்தை பெயர் | : | வெங்கடேசன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | அண்ணாநகர், 16 வது தெரு | தொழில் | : | கொத்தனார் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 produced through V.C.,and other accused present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் என் பெற்றோருடன் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் 12 வது எதிரியான நிமோசன் என்பவரின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து என் நண்பர் டைசன் என்பவருடையது..

3) கடந்த 18.09.2025 அன்று நானும் என் நண்பர் டைசனும் விளார் பைபாசில் மாலை 4.00 மணியளவில் கடைக்கு சென்றுகொண்டிருந்தோம். அப்போது போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துகொண்டிருந்தார்கள். யார் என்று போய் பக்கத்தில் நின்று பார்த்தோம். சசி கொலை வழக்கில் உள்ள ஒரு பையன் என்றும் அவர் பெயர் நிமோசன் என்று சொன்னார்கள். அந்த நிமோசன் தற்போது நீதிமன்றத்தில் உள்ளார். அவர்தான் எதிரிகளின் வரிசையில் 2 வது ஆக நிற்பவர்தான் நிமோசன் ஆவார். ( அவர் பெயர் என்ன என்று நீதிமன்றம் கேட்டபோது அவர் பெயர் தன்னுடைய பெயர் நிமோசன் என்று சொன்னார்.)

4) அப்போது போலீசாரிடம் அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அன்றைய தேதியில் இருந்து சுமார் 10 நாட்களுக்கு முன்பு கலைஞர் நகர் 1 வது தெருவில் நடந்த சசிக்குமார் என்பவர் கொலை சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தார். அன்று இரவு பசுபதிகோவில் அவரது அத்தை வீட்டில் இருந்ததாக கூறினார். சஞ்சய் போனை நிமோசனிடம் கொடுத்துவிட்டு போனதாகவும் அந்த போனை நிமோசன் குடமுருட்டி ஆற்றில் வீசிவிட்டதாகவும் கூறினார். சபரி என்ற பையனை பார்க்க வரும்போது போலிசார் பிடித்துக்கொண்டதாகவும் நிமோசன் வாக்குமூலம் கொடுத்தான். நிமோசன் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும்.

5) அவன் கொடுத்த வாக்குமூலத்தில் நானும் டைசனும் சாட்சி கையெழுத்து போட்டோம்.

6) இது பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் இளம் வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.21 14:59:49 +0530